

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப் பெருந்தகையின் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், துணைப் பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி. மற்றும் நிர்வாகிகள் உடன் சென்று வாழ்த்தினர்.

### நீட் கொடுமை - கோவையில் 19 வயது மாணவி தற்கொலை!

# ஜூன் 23ல் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டனப் போராட்டம்!

கோவை,ஜூன்.19-

கோவையில் நீட் தேர்வு பயம் மற்றும் பயிற்சி மையக் கட்டண சுமை காரணமாக 19 வயது மாணவி அனுகீர்த்தனா தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது ஒன்றிய பாஜக அரசு நடத்தும் தொடர் கொலை என்று தி.மு.க. மாணவர் அணி காரசாரமாக குற்றம் சாட்டியுள்ளது. ஜூன் 23 அன்று ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன போராட்டம் நடைபெறவுள்ளது.

செய்தியாளர்களிடம் கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி கூறியதாவது :

நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி சட்டமன்றத்தில் இரண்டு முறை மசோதா நிறைவேற்றப்பட்டு, ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஆனால், அதற்கு செவிசாய்க்காத ஒன்றிய பாசிச பாஜக அரசு, தொடர்ந்து நீட் தேர்வை திணித்து வருகிறது. இதன் விளைவாக, இன்று கோவையில், 19 வயதான அனுகீர்த்தனா என்ற மாணவி பலியாகியுள்ளார். இது ஒன்றிய பாசிச பாஜக அரசு தொடர் கொலை அப்படின்னு தான் சொல்லணும், ஏன்னா நம்ம அரியலூர் அனிதா மரணத்தின் போதே, எங்களது கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உண்ணா நோன்பு இருந்து கடுமையான போராட்டங்களை முன்னெடுத்தார். ஆனால், இந்த பாசிச பாஜக அரசு எதற்கும் செவி சாய்க்காமல் தொடர்ந்து மாணவர்களின் உயிரோடு விளையாடி வருகிறது.

கோச்சிங் சென்டர் வியாபாரம் : தரமான கல்வி, தரமான மருத்துவர்கள் என்று கூறிக்கொண்டு கொண்டுவரப்பட்ட நீட் தேர்வில், பூஜ்ஜியம் மற்றும் மைனஸ் மதிப்பெண் எடுத்தவர்கள் கூட மருத்துவராகலாம் என்ற அவல நிலை உள்ளது. அப்படியென்றால், இந்த நீட் தேர்வு தரமான மருத்துவர்களை உருவாக்கவா? அல்லது கோச்சிங் சென்டர்களை நடத்துபவர்களின் கல்லாவை நிரப்பவா? தற்கொலை செய்துகொண்ட அந்த மாணவி தன்னுடைய தந்தைக்கு கோச்சிங் சென்டரில் 10 லட்சம் ரூபாய் வரை செலவாகிவிட்டதே என்று கதறி அழுது, மன உளைச்சலுக்கு ஆளாகித்தான் இந்த விபரீத முடிவை எடுத்துள்ளார். இது வேண்டாம் இதை மாணவர்கள் தவித்து விட வேண்டும்.

உலகத்தரம் வாய்ந்த தமிழக மருத்துவம் : ஏற்கனவே செமொழிக் காவலர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த சமச்சீர் கல்வி முறை மிகத் தரமானதாக உள்ளது. உலகமே போற்றும் வகையில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு உலகத்தரம் வாய்ந்த மருத்துவ சிகிச்சைகளுக்கு வெளிநாட்டவர் தேடி வருவது தமிழ்நாட்டிற்கு தான். இத்தகைய சூழலில், நீட் என்ற ஒரு போலியான முகமூடியை அணிந்து கொண்டு, வினாத்தாள் விற்பனை செய்வது, கோச்சிங் சென்டர்களுக்கு ஆள் சேர்ப்பது என ஒரு கார்ப்பரேட் பிசினஸ் மைண்டோடு ஒன்றிய பாஜக அரசு செயல்பட்டு வருகிறது. ஆரிய கூட்டம் நம்மை 2,000 ஆண்டுகள் அடிமைப்படுத்தி வைத்திருந்ததை போல, மீண்டும், மீண்டும் நீட் என்ற பெயரில் நம் பிள்ளைகளை காவு வாங்கக்கூடிய இந்த நீட்டை ரத்து செய்ய வேண்டும்.

ஏற்கனவே சிபிஎஸ்இ 9ஆம் வகுப்பில் மும்மொழிக் கொள்கையை திணிப்பதற்கு எதிராக வரும் ஜூன் 23ஆம் தேதி தி.மு.க. மாணவர் அணி சார்பில் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நீட் தேர்வால் நடந்துள்ள இந்த கொடூர மரணத்தை அடுத்து, வரவிருக்கும் ஜூன் 23 அன்று போராட்ட களத்தில் நீட் தேர்வை தடை செய்யக் கோரியும், ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும் தி.மு.க. மாணவர் அணி சார்பில் மிக வலுவான முழக்கங்கள் முன்னெடுக்கப்படும்.

ஒன்றிய பாஜக அரசை எதிர்த்து தி.மு.கழகத் தலைவர், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படி, கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு தி.மு.க. மாணவர் அணி தொடர்ந்து வீரியமாக போராடும் என்று கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி தெரிவித்தார்.

இதில் கழக மாணவர் அணி துணைச் செயலாளர் கோகுல், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அந்தோணி ராஜ், துணை அமைப்பாளர்கள் சிவகுமார், ராஜ் திலக், பகுதி அமைப்பாளர்கள் சுதன், வருன் விஷ்ணு, முகமது அப்துல்லா உள்பட மாணவர் அணி நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

# பம்மல் தெற்கு பகுதி வட்டச் செயல்வீரர் கூட்டங்கள் !

### பகுதிச் செயலாளர் வே.கருணாநிதி அறிக்கை !

சென்னை ஜூன்:19

பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. வட்டச் செயல்வீரர்கள் கூட்டங்கள் நடைபெறுகிறது. இது குறித்து பகுதி கழகச் செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,தாம்பரம் மாநகரம்,பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் வட்டச் செயல் வீரர்கள் கூட்டங்கள் அந்தந்த வட்டக் கழக அவைத் தலைவர் தலைமையிலும், வட்டக் கழக செயலாளர் வரவேற்பிலும் கீழ்வரும் அட்டவணைப்படி தவறாமல் நடத்தித் தர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டங்கள் நடைபெறும் இடங்கள் வருமாறு; 21.6.2026- ஞாயிற்றுக்கிழமை - காலை-9:00 மணி 7வது வார்டு, 27.6.2026- சனிக்கிழமை - மாலை-5:00 மணி 6வது வார்டு, 28.6.2026- ஞாயிற்றுக்கிழமை - மாலை-5:00 மணி 11வது வார்டு, 28.6.2026- ஞாயிற்றுக்கிழமை - இரவு-7:00 மணி 10வது வார்டு, 5.7.2026- ஞாயிற்றுக்கிழமை - காலை-9:00 மணி 12வது வார்டு, 5.7.2026- ஞாயிற்றுக்கிழமை - மாலை-5:00 மணி 8வது வார்டு, 5.7.2026- ஞாயிற்றுக்கிழமை - இரவு-7:00 மணி 5வது வார்டு.,

இவ்வாறு பகுதிச் செயலாளர் வே. கருணாநிதி அறிவித்துள்ளார்.

# ஆளுங்கட்சியினர் ரீல்ஸ் போடுவதற்கான 'Content Material' ஆக அமைந்துள்ளது ஆளுநர் உரை!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!





**சென்னை, ஜூன் 19-**

**சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் த.வெ.க. அரசின் ஆளுநர் உரை குறித்து, தனது சமூக வலைதளப் பதிவில் "ஆளுங்கட்சியினர் ரீல்ஸ் போடுவதற்கான Content Material – ஆக அமைந்துள்ளது ஆளுநர் உரை என்று குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

தமிழ்நாடு சட்டப்பேரவையில் #SofaModel அரசு அளித்த அறிக்கையை Comma, Full Stop கூட மாறாமல் ஆளுநர் அப்படியே வாசித்திருப்பது பாஜக - த.வெ.க-வின் மறைமுக கூட்டணியை அம்பலப்படுத்தி இருக்கிறது.

ஆளுங்கட்சியினர் Reels போடுவதற்கான Content Material-ஆக அமைந்துள்ள ஆளுநர் உரையில் வளர்ச்சிக்கான திட்டங்கள் ஏதும் இல்லை.

தொடர் மின்வெட்டு - பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட சட்டம் ஒழுங்கு சீர்கெடு - விவசாயிகள் பிரச்சினை போன்றவற்றிற்கு எந்த தீர்வும் ஆளுநர் உரையில் இல்லாதது ஏமாற்றம் அளிக்கிறது.

கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி காலத்தில் செய்யப்பட்ட சாதனைகளுக்கு Sticker ஒட்டியும், த.வெ.க அரசின் சறுக்கல்களுக்கு கழகத்தின் மீது பழிபோடும் வகையிலும் அமைந்துள்ள ஆளுநர் உரையை கண்டிக்கிறோம்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 அடி தேவையில்லை – 132 அடியே போதும் என

# கம்பம் த.வெ.க. எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா சர்ச்சை பேச்சு!

## விவசாயிகள் கடும் கண்டனம்!

தேனி , ஜூன் 19-

த.வெ.க. கட்சியின் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ஜெகநாத் மிஸ்ரா முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 அடி தேவையில்லை 132 அடியே போதும் என்ற சர்ச்சை பேச்சால் விவசாயிகள் கடும் கண்டனம் தெரி வித்துள்ளனர்.

தமிழக கேரளா எல்லையில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு அணை 152 அடி உயரம் கொண்டதாகும், இந்த அணையை நம்பி. தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட 5 மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் குடி நீர் ஆதாரமாகவும் விளங்குகிறது.

இந்நிலையில் கடந்த 2011ம் ஆண்டு முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்தக் கோரி தேனி மாவட்டம் மட்டுமின்றி மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஒரு மாதமாக பல்வேறு போராட்டங்களை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து கடந்த 2014ல் உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியது. அதில் முல்லைப் பெரியாறு பலமாக உள்ளது. அதில் 142 அடி வரை நீர் தேக்கிக் கொள்ளலாம் என்று தீர்ப்பு வழங்கி உள்ளது.

இந்நிலையில் தேனி மாவட்டம் கம்பம் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் ஜெகநாத் மிஸ்ரா நேற்று முன்தினம் கேரளா தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு தமிழக உரிமைகள் பறிபோகும் அளவிற்கு முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 தேவையில்லை. 132 அடி போதும் என்று இது கம்பம் மற்றும் தேனி மாவட்ட விவசாயிகள் இடையே கடும் கோபத்தையும், கடும் கண்டனத்தையும் தெரிவித்து உள்ளது.

இது குறித்து முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பு விவசாய சங்க முதன்மை தலைவர் சலேத் கூறியபோது.

முல்லைப் பெரியாறு அணை பற்றி பேச யாருக்கும் உரிமை கிடையாது, முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடி உயரம் உயர்த்தி கொள்ளலாம் என்று கடந்த 2014 தீர்ப்பு வழங்கியது உள்ளது.

மேலும் பேபி அணையை பலப்படுத்தி பின் 152 அடி உயர்த்த வேண்டும் என்று இன்றும் விவசாயிகள் கூறிவரும் நிலையில் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ஜெகநாதன் மிஸ்ரா 152 அடி உயரம் தேவையில்லை 132 அடியே போதும் எங்களுக்கு என்று கேரளா தனியார் தொலைக் காட்சிக்கு ஏற்ப பேசியது. அந்த சர்ச்சை பேச்சு மிகவும் தவறானது கடும் கண்டனத்திற்கு உரியது என்றும் மேலும் விவசாயிகளுடன் ஆலோசித்து இது பற்றி அவர்களிடம் கேட்கப்படும் என கூறினார்.

### மயிலை த,வேலு தலைமை! நந்தனம் கி,மதி - எஸ்,முரளி - கோ,ஏழுமலை - கோ,சி,மணி முன்னிலை!

# சென்னை தென்மேற்கு மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் எஸ்,சரவணன் அறிக்கை!

சென்னை, ஜூன். 19

சென்னை தென்மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.சரவணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மாவட்டத் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (19.06.2026 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, சி.பி.ராமசாமி ரோடு, மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் பகுதிக் கழகச் செயலாளர்கள் நந்தனம் கி.மதி, எஸ்.முரளி, கோ.ஏழுமலை, கோ.சி.மணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே சென்னை தென்மேற்கு மாவட்ட மாணவர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழகத் தலைவர் அறிவுறுத்தலின்படி பி.எம். ஸ்ரீ.சி.பி.எஸ்.சி. ஒன்பதாம் வகுப்பு மும்மொழிக் கொள்கை இந்தி திணிப்பை எதிர்த்து மற்றும் வி.பி.எஸ்.ஏ. மசோதாவை திரும்ப பெறக் கூறியும் ஒன்றிய அரசை கண்டித்து வருகின்ற 23 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக

இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.சரவணன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.







இந்தி எதிர்ப்பு போர் என்ற தலைப்பில் வருகின்ற ஜூன் 23ம் தேதி சைதாப்பேட்டை கலைஞர் வளைவில் காலை 9மணி அளவில் நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்டத்திற்கு சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டத்திற்கு கழக மாணவர் அணி பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா அவர்கள் தலைமையில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.. இளங்கோவன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை சோழ ராஜன், க. அமுதரசன், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் தி.மு.க மாணவர் அணி செயலாளர் திருமதி. ஈரோடு வீரமணி ஆலோசனை வழங்கினார்.



தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூரில் டி.ஆர்.பாலு அவர்களின் உதவியாளர் ஆர்.செல்வம் உறவினர் இல்ல திருமணத்தை கழக பொருளாளர் நாடாளுமன்ற மக்களவை திமுக குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் தலைமை ஏற்று நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார். தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை அன்பழகன், தலைமை செயற்குழு உறுப்பினர் செ.இராமலிங்கம், கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெ. சுதாகர் ஆகியோர் உடன் உள்ளனர்.



நந்திவரம் – கூடுவாஞ்சேரி பா. அனுராதா – பார்த்திபன் இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் எம். கே. டி. கார்த்திக் தண்டபாணி தலைமை ஏற்க காஞ்சிவடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர். தா. மோ. அன்பரசன் வாழ்த்துரை வழங்கினார். இந்த நிகழ்வில் சேபாக்கம் பகுதி முன்னாள் மாவட்டப்பிரதிநிதி எஸ். வெங்கா, பகுதி பிரதிநிதி எஸ். பிரபா மற்றும் ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.